**28.21 உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகளும் பொறுப்புகளும் மற்றும் அதிகாரங்களும் வழங்குதல் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல்பாடு குறித்து மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது**

---

மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலம் (எல்1)

அரசாணை (நிலை) எண். 272 நாள் : 07.06.1999

படிக்க :

ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்களின் நேர்முக கடித எண் 14532/சி2/99 நாள் 11.05.1999

**ஆணை**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து அரசு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர் மட்டக் குழுவை அமைத்தது. இந்த உயர்மட்டக் குழு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் வழங்குவது குறித்து விவாதித்து தனது இறுதி அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை அரசால் கூர்ந்து ஆராய்ந்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த பரிந்துரைகளை ஆழ்ந்து பரிசீலித்து எடுத்த முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

அ. கிராம ஊராட்சிகள் தங்களது பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் செயல்படுத்தும் நலப்பணிகளை மேற்பார்வையிட்டு இந்த சேவைகளின் மேம்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம். இந்த அதிகார வரம்புகள் விபரம் இணைப்பு 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது

ஆ. கிராம அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஏற்று நடத்தும் சில குறிப்பிட்ட செயல்பாடுகள் குறித்து ஊராட்சி ஒன்றியக்குழு (பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்) தகுந்த அறிவுரைகளை அதிகாரிகளுக்கும் களப் பணியாளர்களுக்கும் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கலாம். இந்த செயல்பாடுகள் மற்றும் அதிகார வரம்பு விபரம் இணைப்பு 2ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இ. மக்களின் நல்வாழ்வு தொடர்பாக மருத்துவமனைகள் மற்றும் பிற சுகாதார நிலையங்கள் ஏற்று நடத்துவது தொடர்பான 14 வகை செயல் திட்டங்கள் குறித்து மாவட்ட ஊராட்சிகள் மேற்பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

ஈ. கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கு இணைப்பு 4ல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சித் திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிய வேண்டும்.

உ ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் குடும்ப நலத்துறையைச் சார்ந்த செயல்பாடுகள் குறித்து இணைப்பு 5ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களுடன் ஆய்வு செய்து தகுந்த ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறிப்பிட்ட பொறுப்புகளையும், அதிகாரங்களையும் உள்ளாட்சி அமைப்புகள் சிறப்புற செயல்படுத்தும் வகையில் சுகாதாரம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநரும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை இயக்குநரும் மாவட்ட அளவிலான மற்றும் பிற களப்பணியாளர்களுக்கு விரிவான அறிவுரைகள் வழங்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வ.விஸ்வநாதன்**
அரசு செயலாளர்

## இணைப்பு 1

### கிராம ஊராட்சிகள்

1. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் சேவைக்கான எல்லைப் பரப்பினை விரிவுபடுத்தும் பொழுது சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்து இதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைளுக்கு உதவுதல்.

2. மாவட்ட பயிற்சிக் குழுக்கள் வாயிலாக தொண்டு நிறுனங்களைச் சார்ந்த செவிலியர்கள், மருத்துவர்கள் மற்றும் இதார பணியாளர்களுக்கு சுகாதார பயிற்சியளித்து கிராம அளவில் மக்கள் பயன்பெறும் வண்ணம் உதவுதல்.

3. நாட்டு மருத்துவர்களின் சேவைகளை ஆய்ந்து அறிந்து தகுதியுடைய மருத்துவர்களின் செயல்பாட்டினை ஊக்குவித்து உதவுதல்.

4. கருவுற்று மற்றும் கருவுறக்கூடிய பெண்களின் புள்ளி விபரங்களை பதிவு செய்து மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ நலப் பணியாளர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்தல்.

5. குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த புள்ளி விபரங்களை திரட்டி, அவற்றிற்கான காரணங்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவித்து உதவுதல்.

6. பேறுகால இறப்பு மற்றும் பிறந்து ஓராண்டிற்குள் இறக்கும் குழந்தைகளின் இறப்பிற்கான காரணங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரிவித்து மேல் நடவடிக்கைகள் எடுக்க உதவுதல்.

7. அத்தியாவசியமாகத் தேவைப்படும் உயிர்காப்பு மருந்துகள், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் நோயாளிகளின் தேவைக்கு இருப்பில் இருக்க மேற்பார்வையிட்டு மருந்துகள் இருப்பில் இருப்பதனை உறுதி செய்தல்.

8. கிராம பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் இதர சுகாதார பணியாளர்களை அந்தந்த பொறுப்பு பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்றுவர ஊக்கமளிப்பதுடன், பொதுமக்கள் அரசின் மருத்துவத்துறை சார்ந்த சேவைகளை முறையாக பயன்படுத்திக் கொண்டு தேவையான விழப்புணர்வினை அளித்தல்.

9. ஆரம்ப மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளில் உடல் நலம் குறித்து மருத்துவ அட்டை பராமரிக்கப்படுகின்றதா என்பதனை ஆய்வு செய்து, மாணவ/மாணவிகளுக்கு காலமுறையிலான மருத்துவ பரிசோதனை, வயது வந்த மாணவிகள் மற்றும் பெண்களுக்கான ஊட்டச்சத்து மற்றும் உடற்கூறுகள் சார்ந்த அடிப்படை விவரங்களை தெரிவித்தல் மற்றும் மருத்துவ பரிசோதனையில் கண்டறியும் நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றனவா என்பதையும் மேற்பார்வையிட்டு உறுதி செய்தல், பள்ளிகளில் உடல்நலம், நல்ல சத்துணவு மக்கட்தொகை, கல்வி ஆகியவை குறித்து மாணவர்களுக்கு அடிப்படை அறிவினைப் புகட்ட, சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி, சேவைகளை ஒருங்கிணைத்தல்

10. கிராமங்களின் செயல்படும் கிராம நலவாழ்வுக்குழு பள்ளிகளை காலமுறை அடிப்படையில் தொடர்ந்து பார்வையிடுகின்றதா என்பதனை அறிந்து அக்குழுவினை ஊக்கப்படுத்துதல்.

11. நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்து செயல்பட கிராம அளவில் கிராம நல்வாழ்வு குழுக்களை கிராம ஊராட்சிகள் அமைக்கலாம். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரை குழுவின் தலைவராகவும் குழு உறுப்பினர்களாக கிராம சுகாதார செவிலியர்கள், மரபு மருத்துவ செவிலியர்கள் மற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரை சேர்த்து சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவை ஆகியவை மக்களுக்கு கிடைக்க நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

12. கிராமத்தில் ஏற்படும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றம் தீராத நோய்களைக் கண்டறிந்து தகுந்த மருத்துவ சேவை அளிக்க ஏதுவாக மருத்துத்துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு உதவலாம்.

13. கிராம அளவில் பொதுமக்களின் நலனுக்காக சுகாதார மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்துதல்.

14. கிராம ஊராட்சிகள் உணவு கலப்படச் சட்டத்தை செயல்படுத்த அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளுக்கு உதவலாம்.

15. கிராம குடிநீர் தேக்கத் தொட்டிகளை காலமுறையில் சுத்தம் செய்தல், கிணறுகளுக்கு குளோரின் மருந்து கலவை தெளித்தல் மற்றும் தனியார் வசமுள்ள நிர்த் தேக்க தொட்டிகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்வதை உறுதி செய்தல் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதிலிருந்து காத்தல்.

## இணைப்பு 2

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. கிராம அளவில் நோய் மற்றும் கொள்ளைநோய் தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் மீதான விளைவுகளை மதிப்பீடு செய்து சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கும், மாவட்ட ஊராட்சிக்கும் அறிக்கைகள் அனுப்பி விடலாம்.
2. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் மகப் பேறுக்குமுன் மற்றும் பின் எடுக்கப்பட வேண்டிய தாய் சேய் நலம் சார்ந்த பணிகள் திறம்பட நிறைவேற்றப்பட கிராம ஊராட்சிக்கு உதவுதல்.
3. மரபுவழி மகப்பேறு செவிலியர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்துதல், கிராம அளவிலான பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தி திறம்பட பணியாற்ற உதவுதல்.
4. வயது வந்த பள்ளி மாணவிகளுக்கு உடல் கூறுகள் குறித்த விபரங்கள் மற்றும் இதர பொருட்களின் மீதான முழு அறிவு சார்ந்த தகவல்களை தருவதற்கு களப் பணியாளர்களுக்கு உதவுதல்.
5. தன்னார்வ தொண்டு நிறுனங்கள் மூலம் கிடைக்கும் மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை கண்டறிந்து அந்தந்தப் பகுதி கிராம ஊராட்சிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி சேவைகளை ஒருங்கிணைக்கலாம்.
6. காலமுறைப்படி அம்மை குத்துதல் மற்றும் தடுப்பூசி போடுதலை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல், இதனை கிராம ஊராட்சிகள் மூலம் செயல்படுத்துதல், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகியவற்றில் பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்து குறைபாடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலரிடம் தெரிவித்தல்.
7. மைய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உரிய முறையில் செயல்படுத்தப்பட்டு பொதுமக்கள் இத்திட்டங்களின் மூலம் பயன் பெறுகின்றனரா என்பதனை ஆய்ந்து அறிந்து சம்பந்தப்பட்ட மேல்நிலை அலுவலர்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் அறிக்கைகள் அனுப்பி மேல் நடவடிக்கைகள் கோரலாம்.
8. கிராம ஊராட்சிகள் அளவில் செயல்படுத்தப்படும் தாய் சேய் நலத் திட்டங்களின் அறிக்கைகள் பெற்று திட்டங்கள் திறம்பட செயல்படுவதற்கான அறிவுரைகளை கிராம ஊராட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கும் தெரிவித்தல்.
9. கிராம ஊராட்சிகள் மூலம் நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.
10. காலமுறையாக, தாய் சேய் நலன் குறித்த திட்டங்கள், நோய் தடுப்பு உத்திகள் ஆகிய திட்டங்கள் குறைவின்றி செயல்படுகின்றதா என்பதனை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.
11. ஊராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட பள்ளி குழந்தைகள் சார்ந்த உடல்நலத் தன்மைகள், பரவி வரும் நோய்கள் குறித்து அறிக்கைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் தொகுப்புக்களை ஆய்ந்து, கருத்துரைகளுடன் மாவட்ட ஊராட்சிக்கு அனுப்புதல், பொதுமக்களிடையே நோய் மற்றும் கொள்ளை நோய் மற்றும் உயிர்க்கொல்லி நோய்களுக்கெதிரான தடுப்பூசிகள் மற்றும் அம்மை தடுப்பு மருந்துகள் போடப்படுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.
12. ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் மற்றும் இதர மருந்தகங்களுக்கு பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் முறையாக வருகை புரிந்து பணியாற்றுகின்றனரா என்பதை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.
13. உணவு கலப்படத்தை தடுக்க 1954 ம் ஆண்டு உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் வழிகளை செயல்படுத்துதல்
14. துப்புரவு, வடிகால், பொது கழிப்பிடங்கள் போன்றவற்றின் கட்டுமானப் பணிக்காவும், அவைகளை பராமரிப்பதற்காகவும், தேவையான நிதி உதவியும், தொழில்நுட்ப உதவியும் ஊராட்சிகளுக்கு அளித்தல் மற்றும் செயல்பாட்டினை மேற்பார்வையிடுதல், திடக் கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்பார்வையிடுதல்.
15. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் கருவிகளின் இருப்பினை உறுதி செய்து மற்றும் கருவிகள் வழங்கலை மேற்பார்வையிடல்.

## இணைப்பு 3

### மாவட்ட ஊராட்சிகள்

1. மக்களின் நல்வாழ்வு தொடர்பாக செயல்படுத்தப்படவும், அனைத்து திட்டங்களையும் ஆய்ந்து அறிந்து ஆண்டு அறிக்கைகள் தயார் செய்தல், இவ்வாறு தயார் செய்யப்பட்ட அறிக்கையினை பிற மாவட்ட அறிக்கையுடனும், மாநில அறிக்கையுடனும் ஒப்பிட்டுப் பார்த்து தங்கள் மாவட்டத்தின் நிலையை அறிதல்.

2. ஊராட்சி ஒன்றியப் பணிகளை மேம்படுத்துவதற்காகவும், உரிய ஆண்டு திட்டம் தயாரிப்பதற்காகவும், 4 மாதங்களுக்கொருமுறை நல்வாழ்வு மற்றும் மேம்பாடு சார்ந்த அலுவலர்களின் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி கலந்துரையாடல்கள் மூலம் சேவைகளை மேம்படுத்த உதவுதல்.

3. நோய் மற்றும் உயிர்க்கொல்லி நோய்களை தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை மாவட்ட பகுதிகளில் மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல். இவை தொடர்பான சிறிய மற்றும் பெரிய அளவில் மதிப்பீடு அறிக்கைகளை தயாரித்தல். அந்த அறிக்கைளை அரசுக்கு அனுப்பி ஆலோசனைகள் வழங்கல்.

4. அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் வழங்கப்படுவதை மேற்பார்வையிட்டு உறுதி செய்தல்.

5. வட்டார அளவில் திட்டங்கள் தயாரித்து செயல்படுத்துவதில் மாவட்ட திட்டக் குழுவிற்கும், மருத்துவ மற்றும் சுகாதாரத் துறைக்கும் உதவுதல்.

6. மனித வளத்தினை முறையாகப் பயன்படுத்தும் பொருட்டு பேணிக்காக்க மாவட்ட அளவிலான மனிதவள மேம்பாடு வாழ்க்கைத் தர அட்டவணையை தயாரித்தல்.

7. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலிருந்து திரட்டப்படும் பிறப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கை, பேறு காலங்களில் நடைபெறும் இறப்பு எண்ணிக்கை, இறந்து பிறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை, பிறந்து ஓராண்டிற்குள் (ஒரு வயது) இறந்து போகும் குழந்தைகள் விபரம் மற்றும் இவை தொடர்பான புள்ளி விபரங்களை தொகுத்து மாவட்ட அளவில் அறிக்கைகளாக தயார் செய்து இந்த அறிக்கைகள் அரசு மாநிலத் திட்டக்குழு, மாவட்ட திட்டக்குழு, மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து, அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களை திட்டமிடுதல் தொடர்பான பணிகளுக்கு பயன்படுத்த ஏதுவாக்கலாம்.

8. ஆரம்ப மற்றும் தொடக்கப்ப பள்ளிகளில் செயலாக்கப்படும் மருத்துவ பரிசோதனை, மருத்துவ அட்டவணைகள் பராமதித்தல் மற்றும் இது தொடர்பான செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு அரசுக்கு அறிக்கைகள் அனுப்பலாம். திட்டங்கள் செவ்வனே செயல்படும் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றம் கிராம ஊராட்சிகளுக்கு அறிவுரைகள் வழங்கலாம்.

9. மாவட்டங்களில் செயல்படும் நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான தகவல்களைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கும் மேலும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உதவலாம்.

10. மருத்தவ, சுகாதாரப் பணிகள் சார்ந்த பணியாளர்களை தேர்வு செய்வதிலும், பதவி அமர்த்துவதிலும், ஆவன செய்தல். மேலும், அயர்பணியில் பணியர்த்தப்படுவது மற்றும் பணிமாறுதல் செய்வது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கலாம்.

11. உணவுக் கலப்படத்தை தடுத்தல் குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல், மாவட்ட உணவு/பருப்பு ஆய்வுக் கூட்டங்களின் செயல்பாடு குறித்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்கலாம்.

12. மாவட்ட அளவில் புராதன மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேதா, யுனானி முறை மருத்துவங்களின் பலன் மற்றும் சேவைகளை மக்கள் பெறும் பொருட்டு ஊக்குவித்தல்.

13. மாவட்ட பகுதியில் இயங்கும் மருத்துவமனைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மருத்துவ நிலையங்களுக்கு மருந்துகள் சிகிச்சை கருவிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல்.

14. அனைத்து மருத்துவமனை கழிவுகளை பாதுகாப்பான முறையில் ஒதுக்குப்புறமான இடங்களுக்கு வெளியேற்ற உதவுதல்.

## இணைப்பு 5

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்தல்.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலருடன் ஆய்வு செய்தல்.

3. வட்ட மருத்துவமனை மற்றும் பிற மருத்துவமனைகள் பற்றி இணை இயக்குநர் / துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்தல்.

### மாவட்ட ஊராட்சி

1. சுகாதார துணை நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

3. அரசு மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ மருந்தகம் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்) துணை இயக்குநர் (மருத்துவம்) ஆகியோருடன் ஆய்வு செய்தல்.

4. வட்டார மருத்துவமனை மற்றும் இணை மருத்துவமனைகள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்) துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.

5. மகப்பேறு நிலையங்கள் பற்றி துணை இயக்குநர் (சுகாதாரம்) துணை இயக்குநர் (மருத்துவம்) அவர்களுடன் ஆய்வு செய்தல்.